2001 ஜனவரி 23]

அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு காப்பகம் அமைக்கின்ற முகத்தான் அல்லது அப்படிப்பட்டவர்களை வந்த இடத்திற்கே திருப்பி அனுப்பும் முகத்தான் ஏதாவது ஒரு முயற்சியை மேற்கொண்டு, அந்தப் பகுதியைச் சரியாக வைத்துக்கொள்வதற்கும், அதே நேரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவம் செய்து சுகமாக்குகின்ற விதத்திலும், அதிலும் குறிப்பாக இந்திய முறை மருத்துவத்தின் மூலம் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலத்திலே மூலிகைகள் கலந்து வருகிற அந்த நீரின் மூலமாக மனநோய் தீருகிறது என்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதைச் சித்த மருத்துவர்களும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், நமக்கு இருக்கின்ற பிரச்சினை, வருடம் 365 நாளும் குற்றாலத்திலே நீர் வருவதில்லை. சில மாதங்கள்தான் வருகிறது. மனநோயாளிகளை அங்கே கொண்டுபோய் இரண்டு மாதத்திற்கோ, மூன்று மாதத்திற்கோ வைத்துவிட்டு, பிறகு ஒன்பது மாதத்திற்கு அவர்களைச் சும்மா வைத்தால், அதுவே அவர்களைப் பைத்தியமாக்கிவிடும். எனவே, அதுவும் இயலாத காரியம். கன்னியாகுமரி பற்றிச் சொன்னார்கள். வடநாட்டிலேயிருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகள், மனநோயாளிகளை அங்கேயே விட்டுவிட்டுபோய் விடுகிறார்கள்; அதனால், அங்கே பிரச்சினைகள் அதிகமாகின்றன என்று சொன்னார்கள். அதுகுறித்து அரசுக்கு முழுத் தகவல் கிடைக்குமானால், அவர்களை உரிய இடத்திற்குத் திருப்பி அனுப்பத் தேவையான ஏற்பாடுகளை அரசு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 23, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

23—

மருத்துவமனைக்கு படுக்கை வசதி

***26938—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 23

சீர்காழி தொகுதி சீர்காழி அரசு பொது மருத்துவமனையில் பெண்கள் பகுதி படுக்கை வசதியை விரிவுபடுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சீர்காழி அரசு பொது மருத்துவமனையில் பெண்கள் பிரிவில் படுக்கை வசதியை விரிவுபடுத்துதல் குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. நிதிநிலைக்கேற்ப, இனி வரும் காலங்களில் இது பற்றி அரசு கருத்திற்கொள்ளும்.

திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி அரசு மருத்துவமனையில் ஒரு நாளைக்கு வெளி நோயாளிகள் குறைந்தபட்சம் 1,500 பேர் வருகிறார்கள். உள் நோயாளிகள் பிரிவிலே 74 படுக்கைகள் இருக்கின்றன. அதிலே பெண்கள் பிரிவிலே 16 படுக்கைகள் மட்டும்தான் இருக்கின்றன. பல ஆண்டுகளாக பெண்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகிறார்கள். உள் நோயாளிகள் பிரிவில் இடம் கிடைக்காத காரணத்தினால், பெண்கள் பிரிவில் 16 படுக்கைகளே இருக்கின்ற காரணத்தினால், அதில் மேலும் 10 படுக்கைகளையாவது விரிவுபடுத்திக் கொடுக்க வேண்டும். மேலும், அந்த அரசு மருத்துவமனையில் 9 மருத்துவர்கள் பணியாற்றினார்கள்; தற்சமயம் 4 மருத்துவர்கள்தான் இருக்கிறார்கள். மயக்க மருந்து மருத்துவர் இல்லவே இல்லை. எனவே, அதையும் உடனடியாக நிரப்பிக்கொடுத்து, 10 படுக்கைகளைக் கூடுதலாக பெண்கள் பிரிவிற்கு ஏற்படுத்திக் கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற 16 படுக்கைகள் என்பது, பேறுகால பின் கவனிப்புப் பிரச்சினைகளுக்காக இருக்கின்ற படுக்கைகள். பெண்கள் பிரிவிலே தனியாக 15 படுக்கைகள் இருக்கின்றன. மகப்பேறு பிரிவிலே 16 படுக்கைகள் இருக்கின்றன. பெண்கள் மகப்பேறு காலம் முடிந்ததற்குப் பிறகு ஏதாவது பிரச்சினைகள் இருக்குமானால், அவர்களை அனுமதிக்க 6 படுக்கைகள் இருக்கின்றன. எனவே, பெண்களைப் பொறுத்தவரையிலே கிட்டத்தட்ட 37 படுக்கைகள் அந்த மருத்துவமனையிலே இருந்துகொண்டிருக்கின்றன. எனவே, தேவையிருப்பின் நிச்சயமாக இந்த அரசாங்கம் 10 அல்லது 20 படுக்கைகளைக்கூட அதிகரித்துக் கொடுக்கத் தயாராக இருக்கிறது.*